14th November 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜோனல் கவுன்சிலில் ஒரு முடிவும் செய்யவில்லை, பொதுவாகத் தான் விவாதித்தோம் என்று திரும்ப திரும்ப சொன்னேன். ஏதோ முடிவு ஏற்பட்டதாக வைத்துக் கொண்டு, அந்த முடிவு எப்படி அமுல் செய்யப்படும் என்பது பற்றி அதற்குமேல் கேள்வி கேட்கப்படுகிறது.

SRI T. S. RAMASWAMI PILLAI : இந்த மண்டலத்திலுள்ள ராஜ்யங்களிலுள்ள சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தைப்பற்றி பொதுவாக ஆலோசிக்கப்பட்டதே தவிர ஒன்றும் முடிவு செய்யப்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். முடிவு ஒன்று எடுக்கா விட்டாலும், இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு ஒரு கமிஷன் ஏதாவது ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டதா ? அல்லது எல்லாவற்றையும் விட உயர்ந்த நிலையில் உள்ள சம்பள விகிதத்தை எல்லா ராஜ்யங்களிலும் ஒன்றாகக் கொடுப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பொதுவாக விவாதம் நடந்ததே ஒழிய இதுபற்றி எந்தவிதமான முடிவும் அங்கு எடுக்கவில்லை என்று முன்பே குறிப்பிட்டேன்.

SRI R. KRISHNASWAMY NAIDU : தென் பிராந்திய கவுன்சிலில் சோலையார், பம்பையார், கல்லாறு இவைகளினுடைய தண்ணீரை உபயோகப்படுத்துவது பற்றி பேசப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கேரளாவின் விஷயத்தைப்பற்றி முதல் கவுன்சில் கூட்டத்தில் இங்கு இருக்கக்கூடிய மந்திரி சபையும், அங்கு இருக்கக்கூடிய மந்திரி சபையும் கூடி ஆலோசிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதனால் இரண்டாவது கூட்டத்தில் இந்த விஷயம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

SRI N. K. PALANISAMI : நிலவரம்பு கட்டும் விஷயமாக மத்திய சர்க்கார் மாகாண சர்க்காருக்கு அதிகாரம் கொடுத்து இருக்கிறது. அந்த 9-20 a.m.
அடிப்படையில் நிலவரம்பு கட்டும் வகையில் ஏதாவது முடிவு செய்தார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முடிவு எடுக்கவில்லை.

SRI K. RAMACHANDRAN : அமைச்சர் அவர்கள் பொது விவாதம் நடந்ததாகச் சொன்னார்கள். ஆனால் நிலவரம்பு கட்டுவது சம்பந்தமாக இந்த மன்றம் செய்கிற முடிவை அனுசரித்து நடவடிக்கை எடுப்பார்களா ? அல்லது அந்த கவுன்ஸில் முடிவுப்படியேதான் செய்யவேண்டுமா ? ஏற்கெனவேயே மலபாரில் அவர்கள் தனியாகச் செய்திருப்பது போல நாமும் செய்யலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜோனல் கவுன்சில் முடிவு செய்வதில்லை. ஒவ்வொரு ராஜ்யத்தின் அநுபவத்தையும், அவர்களுடைய ஆலோசனையையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு அதன் மூலமாக ஒவ்வொரு ராஜ்ய சர்க்காரும் சட்ட மன்ற ஆலோசனையின்படித்தான் முடிவு எடுக்கவேண்டும்.

Department of Statistics

* 162 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the work done by the Department of Statistics in the year 1956–57; and

(*b*) the number of reports published during that period by this Department?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix on pages 300–305 infra.

[14th November 1957

SRI V. K. RAMASWAMY MUDALIAR : I would like to know from the Hon. Minister whether these surveys are in any way useful to the ryots and, if so, how are these people benefited by these surveys?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Collection of statistics is a primary need for any planning and when these statistics are available, it is also useful to the ryots in the matter of agricultural production and in the matter of organization of small industries, and other things.

SRI V. K. KOTHANDARAMAN : *இந்த ராஜ்யத்தை ஐந்து செண்டர்களாகப் பிரித்து விலைவாசி புள்ளிவிவரம் தயாரிக்கப்படுகிறது. ஆனால் சென்னை விலைவாசி புள்ளிவிவரங்களைக்கொண்டே பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. ஆனால் கடலூர் கோவை முதலியவற்றின் புள்ளி விவரம் அதிகமாக இருக்கிறது. அதனால் அந்தப் பிராந்தியத்தில் உள்ளவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் ஜில்லாவாரியாகப் புள்ளி விவரம் தயாரித்து அதன் அடிப்படையில் பஞ்சப்படி கொடுக்க முயற்சி செய்யப்படுமா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *இதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பார்த்து பதில் சொல்கிறேன்.*

Records about Poligars

* 163 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have all the records about Poligars who waged war against the British during 1709 to 1802; and

(*b*) whether the Government have got the complete historical records of Kattabomman, Oomaidurai, Veera Maruthu brothers and Pandians of Sivaganga?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Poligar war in the Southern districts against the British began in 1797 (and not in 1709) and ended in 1801. In fact, the connexion of the English with Tirunelveli and other Southern districts began in 1781 with the assignment of the Revenues of the Carnatic by the Nawab of Arcot. An account of the wars waged by Kattabomman, Oomadurai and Veera Maruthu brothers is given in Caldwell's History of Tirunelveli and in the Gazetteer of the Tirunelveli District, Volume I, by H. R. Pate. Official information about these wars of the Poligars against the British is contained in the Revenue Consultations and the Board's Consultations from 1797 to 1801. Except for the information contained in these records there are no other historical records relating to Kattabomman, Oomadurai, Veera Maruthu brothers and Pandians of Sivaganga available with the Government.

SRI N. K. PALANISAMI : *சர்க்கார் கட்டபொம்மன், ஊமைத்துறை, வீரமருது இவர்களுடைய சரித்திரத்தைப் பரிசீலனை செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *இப்போது ஒன்றும் அதுமாதிரி ஆலோசனையில் இல்லை.*